**செய்தி வெளியீடு எண் : 832** **நாள்: 13.11.2009**

**பத்திரிக்கைச் செய்தி**

தாட்கோ, அனைத்து மாவட்ட மேலாளர்கள் ஆய்வுக் கூட்டம் இன்று **13.11.09** சென்னை தலைமைச் செயலக புதிய கட்டிடத்தில் உள்ள வேளாண் கூட்டரங்கில் காலை **11.30** மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மகளிர் நிலம் வாங்கும் திட்டம், தனிநபர் கடன் உதவித்திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதியுதவி திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார உதவித்திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் விரைவாக பெறுவதற்கான வைப்பு தொகை வழங்கும் திட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் **2009–10** ஆம் ஆண்டு தாட்கோ மூலம் சிறப்பு மாநில நிதியுதவி மூலம் வழங்கப்படவுள்ள திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. **25** கோடி ரூபாய் செலவில் **19,811** பயனாளிகள் பயன் பெறும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. மேலும், துப்புரவு பணியாளர் நல வாரியத்தில் அதிக உறுப்பினர்களை சேர்த்து நிதியுதவி வழங்க அறிவுரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தாட்கோ மூலம் **2009–10** ஆம் நிதியாண்டில் சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் ரூபாய் **138** கோடியே **70** லட்சம் செலவில் **1** லட்சத்து **16** ஆயிரத்து **800** பயனாளிகள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு தனது பங்காக ரூபாய் **50** கோடி ஒதுக்கீடு செய்து இதுவரை **15** கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகையினை விரைவில் பயன்படுத்தி திட்டங்களை முழுமையாக செயல்படுத்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சரவர்கள் தாட்கோ மாவட்ட மேலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மை செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சந்திரகாந்த் பி.காம்ப்ளே,இ.ஆ.ப., மற்றும் தாட்கோ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்**
**சிறப்புநிலை நேர்முக உதவியாளர்.**

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**